# <u>Record of Deposition of Witness</u>

## In the Court of District Munsif Uthangarai
## Krishnagiri District

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Case No.** | **:** | O.S.No. 59/2016 | **CNR No.** | **:** | TNKI13-000551-2016 |
| **Name** | **:** | பிரபு | **Father's Name** | **:** | பெருமாள் |
| **Witness for** | **:** | Defendant | **Calling** | **:** | DW1 |
| **Age** | **:** | 34 | **Village** | **:** | ஒந்தியம் |
| **Taluk** | **:** | ஊத்தங்கரை | **District** | **:** | கிருஷ்ணகிரி |
| **Start Time** | **:** | 11:54 AM | **End Time** | **:** | 12:15 PM |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on 09.12.2024 administered by Thiru. G. Amar Anand, B.A.LL.B (Hons), LL.M, District Munsif, Uthangarai.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி:</u>**

(1) எனது அப்பா பெயரிலும் மற்றும் சித்தப்பா பெயரிலும் வாங்கி நிலங்களுக்கு **சர்வே எண்.47/2டி1** நிலத்தில் உள்ள கிணற்றில் இருந்து தான் தண்ணீர் பாசனம் செய்யப்பட்டு வருகிறது என்றால் சரிதான். இன்றைய தேதியிலும் அதே கிணற்றில் இருந்து தான் இருவரும் தண்ணீர் பாசனம் செய்து வருகிறோம் என்றால் ஆமாம், தற்போது நாங்கள் செய்து வருகிறோம், பாதி நிலம் கரம்பாக உள்ளது. வாதியின் நிலம் எவ்வளவு ஆண்டுகளாக கரம்பாக உள்ளது என்றால் 2-3 ஆண்டுகளாக கரம்பாக உள்ளது.

(2) வாதிகள் சென்ற ஆண்டில் பருத்தி அறுவடை செய்தார்களா என்றால் இல்லை அதற்கு முந்தைய ஆண்டு செய்தார்கள். தற்போது மேற்படி கிணற்றில் மின் மோட்டார் மட்டும் தான் உள்ளது என்றால் சரிதான். அது எத்தனை ஆண்டுகளாக உள்ளது என்றால் சுமார் 10 ஆண்டுகள் இருக்கும், எனக்கு எந்த ஆண்டு வாங்கினார் என்று சரியாக தெரியாது. மின் மோட்டார் அமைப்பதற்கு முன்பு மேற்படி கிணற்றில் ஆயில் இன்ஜின் அமைத்து தான் தண்ணீர் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். மேற்படி ஆயில் இன்ஜினை விற்பனை

செய்து தான் எனது தாத்தாவால் மின் மோட்டார் வாங்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. மின் இனைப்பு எண்.145 என்றால் சரிதான்.

(3) மேற்படி மின் இனைப்பு 145 என்னில் உள்ள மின்சாரத்தை வைத்து தான் நானும் வாதியும் பயிர் செய்து வருகிறோம் என்றால் சரிதான். மேற்படி நிலங்களுக்கு என் தாத்தா எப்படி வந்து சென்றால் என்றால் இருவரும் நிலங்கள் வழியாக ஒருவருக்கு ஒருவர் வண்டி வாகனங்களை எடுத்து சென்று தண்ணீர் பாசனமும் செய்து வருகிறோம். மேற்படி பாதையானது எத்தனை நிலங்கள் வழியாக செல்கிறது என்றால் அவ்வாறு எந்த பாதையும் இல்லை, நிலங்கள் வழியாக தான் செல்கிறோம். எனது தாத்தாவும் மேலும் 10 நபர்களும் சேர்ந்து **29.08.1997** தேதியில் ஒரு வழிப்பாதை பாத்திய பத்திரம் செய்துள்ளார்களா என்றால் சரிதான். எனது எதிர்வழக்குரையில் மேற்படி பத்திரத்தை பற்றி சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி பத்திரம் பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் ஆமாம். எனது தாத்தாவும் 10 நபர்களும் வண்டி வழி பாத்தியம் பத்திரம் மூலம் வாங்கப்பட்ட வண்டி வழி உள்ளதா என்றால் உள்ளது. **வா.சா.ஆ.5** பத்திரத்தில் மேற்படி பத்திரம் எழுதியவர்களின் வாரிசுகளுக்கும் உரிமை உள்ளது என்று உள்ளது என்றால் சரிதான். ஆனால் வாதியின் அம்மா அவருடைய நிலம் எதுவும் இல்லாததால் பாத்தியம் வேண்டாம் என்று வாய்மொழியாக சொன்னார். யாரிடம் அவ்வாறு சொன்னார் என்றால் பணம் கொடுத்து வாங்க வேண்டும் என்று நிலம் தர வேண்டும் என்ற காரணத்தினால் மேற்படி 10 நபர்களிடம் அவ்வாறு சொன்னார். வாதி அம்மா அவ்வாறு சொன்னார்கள் என்பதற்கு சாட்சி விசாரிக்க தயாராக உள்ளேனா என்றால் மேற்படி 10 நபர்களை கேட்டாலே சொல்வார்கள். தாயாரை இழந்து வாதி தனியாக இருந்து வருவதால் அவருடைய நிலத்தையும் அபகரிக்க வேண்டும் என்று தண்ணீரை தடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் பணம் கொடுத்து விடவில்லை என்றும் அவர் அவர் நிலத்தில்

தான் பாதைக்காக விட்டுள்ளார்கள் என்றும் பொன்னுசாமியின் வாரிசுகள் அனைவருக்கும், வாதிக்கும் உரிமை உள்ளது என்றும் அது **வா.சா.ஆ.5** பத்திரத்தில் தெளிவாக உள்ளது என்றால் சரியல்ல.

(4) வாதியின் தாத்தா எங்களுக்கு எழுதிகொடுத்த நிலம் சம்பந்தமாக வாதி கேட்டதனால் வாதி வழக்கு சொத்துக்களை அனுபவித்து வருவதற்கு பிரச்சனை செய்து இடையூறு செய்து வருகிறோம் என்றால் சரியல்ல. நாங்கள் வாதிகளுக்கு வீண் இடையூறு கொடுத்து வருவதால் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. மேற்சொன்ன 10 நபர்கள் விட்ட பொது பாதையில் வாதிகள் சென்று வருவதை நான் தடுக்கவில்லை என்றால் ஆமாம்.

(5) <u>**குறுக்கு விசாரணை முடிவுற்றது.**</u>

Taken down by me in open Court, read over to the witness and acknowledged by him / her to be correct.

sd/-xxx

District Munsif
Uthangarai